# நியூ பாரத் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி திருவாரூர்

## நான்காம் வகுப்பு

## முதல் பருவம்

## தமிழ்

பொருளடக்கம்


- அன்னைத் தமிழே
- பனை மரச் சிறப்பு
- ஏழு இறக்கைக் குருவியும் தெனாலிராமனும்
- முளைப்பாரி பாடல்
- பண்படுத்தும் பழமொழிகள்
- முயல் அரசன்
- வெற்றி வேற்கை
- விடியும் வேளை
- கரிகாலன் கட்டிய கல்லணை


# பாடம் 1 [அன்னைத் தமிழே]

I. சரியான விடையை எழுதுக:

1. அன்னை+தமிழே - என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   <u>அன்னைத்தமிழே</u>

2. பிறப்பெடுத்தேன் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>பிறப்பு + எடுத்தேன்</u>

3. மறந்துன்னை இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>மறந்து + உன்னை</u>

4. என்னில் என்ற சொல்லின் பொருள் - <u>எனக்குள்</u>

II. வினா விடை:

1. சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் யார்?

சொல்லில் விளையாடச் சொல்லித் தந்தவள் தமிழன்னை ஆவாள்.

2. எதைச் சொல்ல முடியவில்லை என்று இப்பாடலின் ஆசிரியர் குறிப்பிடுகிறார் ?

தமிழ்ச்சொல்லினால் தமிழன்னையின் புகழைச் சொல்லமுடியவில்லை என்று ஆசிரியர் குறிப்பிடுகிறார் .

3. இப்பாடலின் ஆசிரியர் அன்னைத் தமிழை எவ்விதம் புகழ்கிறார் ?

என்னை வளர்ப்பதோடு மட்டுமல்லாமல் என்னுடன் சேர்ந்து வளர்பவளே! உன்னைப் புகழ்வதற்காகவே இவ்வுலகில் பிறந்துள்ளேன்.சொல் கொண்டு விளையாடுவதற்குச் சொல்லிக் கொடுத்தவளே! அதே சொல்லினால் உனது புகழை என்னால் கூற முடியவில்லையே என்று ஆசிரியர் அன்னைத் தமிழை புகழ்கிறார்.

III. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே எழுத்தில் தொடங்கும் சொற்களை எழுதுக.

1. என்னை - என்னில்

2. உன்னை - உலகில்

3. சொல்லில் - சொல்லி

IV. இப்பாடலில் இடம் பெற்றுள்ள ஒரே ஓசையில் முடியும் சொற்களை எழுதுக

கலந்தவ<u>ளே</u>

வளர்ப்பவ<u>ளே</u>

வளர்பவ<u>ளே</u>

<u>தந்</u>தவ<u>ளே</u>

புகழ்வதற்<u>கே</u>

முடியலை<u>யே</u>

V. பாடலை நிறைவு செய்வோம்

பட்டாம் பூச்சி பறந்து வா

பறக்கும் பூவாய் <u>விரைந்து வா</u>

பட்டு மேனி ஓவியம்

பார்க்க <u>பார்க்கப் பரவசம்</u>

தொட்டு உன்னைப் பார்க்க வா

தோழனாக <u>ஏற்றுக் கொள்ள வா</u>

VI. சொல் உருவாக்கம்

1. குழந்தை
2. அன்னை
3. கவியரசர்
4. தமிழ்மொழி

# பாடம் 2 [ பனை மரச் சிறப்பு ]

I. சரியான விடையை எழுதுக

1. வல்லமை என்ற சொல்லின் பொருள் <u>வலிமை</u>

2. உயர என்ற சொல்லின் எதிர்ச்சொல் <u>தாழ</u>

3. விழுந்து என்ற சொல்லின் எதிர்ச்சொல் <u>எழுந்து</u>

4. கரையோரம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>கரை + ஓரம்</u>

5. அங்கெல்லாம் இச்சொல்லை பிரித்து எழுதக்

   கிடைப்பது - <u>அங்கு + எல்லாம்</u>

6. பிரித்து எழுதுக

   அ) சாலையோரம் = <u>சாலை + ஓரம்</u>

   ஆ) குருத்தோலை = <u>குருத்து + ஓலை</u>

II. வினா விடை

1. பனை மரத்திலிருந்து கிடைக்கும் உணவுப் பொருட்கள் யாவை ?

   நுங்கு, பனங்கிழங்கு, பனம்பழம், பதநீர், கற்கண்டு, கருப்பட்டி போன்ற உணவுப் பொருட்கள் பனை மரத்திலிருந்து கிடைக்கின்றன.

2. சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் எவ்வாறு உதவுகிறது?

   பனங்காய் வண்டி, பனை ஓலைக் காற்றாடி, பனை ஓலை பொம்மைகள் ஆகியவற்றை செய்து சிறுவர்கள் விளையாடுவதற்குப் பனைமரம் உதவுகிறது.

3. பனை மரத்தை நாம் எவ்வாறு பாதுகாக்கலாம்?

மரங்கள் இன்றி மனிதர்கள் இல்லை இதனை உணர்ந்து நாம் அனைவரும் பனைமரம் வெட்டப்படுவதை தடுக்க வேண்டும் பனைமரத்தினைப் பற்றிய பல அறிய செய்திகளை அறிந்து கொண்டு ,பனையின் சிறப்பினை நமது நண்பர்களுக்கும் மற்றவர்களுக்கும் எடுத்துக்கூற வேண்டும் .பனைக்கொட்டைகளை சேகரித்து குளம்,ஆறு, குட்டை போன்றவற்றின் கரையோரங்களில் விதைகளை ஊன்றி பாதுகாக்கலாம்.

4. பனை மரத்தின் பயன்களாக நீ கருதுவனவற்றை உன் சொந்த நடையில் எழுதுக.

- நுங்கு,பனங்கிழங்கு,பனம்பழம் ஆகியவை உணவாக பயன்படுகிறது.
- பனையோலை கூடைகள் முடையவும், கைவினைப் பொருட்கள் செய்யவும் கூரை வேயவும் பயன்படுகிறது .
- பனஞ்சாறு பதனீராகவும் கற்கண்டாகவும் கருப்பட்டியாகவும் பயன்படுகிறது.
- பனை மரம் புயலைத் தாங்கும் வல்லமை பெற்றது.
- பனை மரத்தின் வேர் நீரைத் தக்க வைத்துக் கொள்ளும் இயல்புடையது .இது நிலத்தடி நீர் மட்டம் உயர காரணமாக அமைகிறது.

III மரத்தாலான பொருட்களை பட்டியலிடுக

| | |
|---|---|
| 1. கட்டில் | 7. கோழிக்கூடு |
| 2. ஊஞ்சல் | 8. நாற்காலி |
| 3. மேசை | 9. மரப்பாவை |
| 4. சன்னல் | 10. மண்வெட்டி |
| 5. அரிவாள்மனை | 11. ஏணி |
| 6. சுத்தியல் | 12. கதவு |

IV. சொற்களுக்கு உரிய படங்களைப் பொருத்துதல்

1. ஆ - பசு

2. கை - கை

3. பூ - ரோஜா

4. நா - நாக்கு

5. ஈ - பறக்கும் பூச்சி

6. கா - சோலை

V. ஒரே பொருள் தரும் சொற்களைக் கண்டுபிடித்து வட்டமிடுக.

1. நிலவு - மதி, ஆதவன், திங்கள், கதிரவன், சந்திரன் ,பரிதி

2. அம்மா - சேய், அன்னை , குழந்தை , தாய் ,மழலை, மாதா

3. மகுடம் - அரசன் மணிமுடி, தலை , கிரீடம் அணிகலன் , அரசி

4. திரள் - கூட்டம் கடைவீதி, நெருக்கம் மக்கள், கும்பல், நெரிசல்

VI. கீழ்க்காணும் சொற்களை வரிசைப்படுத்துக.

அவள், சென்றனர்,படித்தான்,வந்தது,பறந்தன,ஓடினர் ,எழுதினான் ,விளையாடினர் ,குயவன் , நாட்டிய மங்கை , மேய்ந்தன , வகுப்பறை , கற்கள்,ஆசிரியர், மாணவர்கள் ,வீடு ,பெற்றோர் ,தங்கை, அண்ணன், மரங்கள், செடி ,மலர் ,பூக்கள் .

| ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பல் | பலவின்பால் |
|---|---|---|---|---|
| படித்தான் | அவள் | சென்றனர் | வந்தது | பறந்தன |
| எழுதினான் | நாட்டியமங்கை | ஓடினர் | வகுப்பறை | மேய்ந்தன |
| குயவன் | மங்கை | விளையாடினர் | வீடு | கற்கள் |
| ஆசிரியர் | | மாணவர்கள் | செடி | மரங்கள் |
| அண்ணன் | | | மலர் | பூக்கள் |

பொருத்துக

1. அவன் - வரைந்தான்
2. அவள் - ஆடினாள்
3. அவர்கள் - ஆடினார்கள்
4. அது - ஓடியது
5. அவைகள் - பறந்தன .

## பாடம் 3 [ஏழு இறக்கைக் குருவியும் தெனாலிராமனும்]

I. சிந்தனை வினா:

- நீ தெனாலிராமனாக இருந்திருந்தால் விஜய வர்த்தன அரசரின் எதிர்பார்ப்பை எவ்வாறு பூர்த்தி செய்திருப்பாய்?

நான் தெனாலிராமனாக இருந்திருந்தால் ஒரு கூண்டை கொண்டு வந்து கொடுத்திருப்பேன் .தாங்கள் கேட்ட அப்பறவை இக்கூண்டிற்குள் தான் இருக்கிறது. ஆனால் இப்பறவை எல்லோர் கண்களுக்கும் தெரியாது .ஒழுக்க நெறியில் வாழும் மனிதர்களின் கண்களுக்கு மட்டும் தான் தெரியும். இப்பறவை உங்களுக்கு தெரியும் என்று நான் நம்புகிறேன் என்று அரசரின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்திருப்பேன்.

II. வினா விடை

1. விஜயநகர அரசரின் அவைப்புலவர் யார் ?

விஜய நகர அரசரின் அவைப்புலவர் தெனாலிராமன் ஆவர்.

2. விஜயநகர வர்தன அரசர் எப்படிப்பட்ட குருவியை கொண்டு வரும்படி கேட்டார் ?

விஜயநகர வர்தன அரசர் தெனாலிராமனிடம், எனக்கு காலையில் தங்க மஞ்சள் நிறத்திலும் நடுப்பகலில் சிவப்பு நிறத்திலும் இரவில் ஏழு வண்ணங்களிலும் வருமாறும் அற்புதக் குருவி ஒன்றை கொண்டுவந்து தர வேண்டும்.மேலும் அது சில சமயம் மூன்று கால்களாலும் சில சமயம் இரட்டை கால்களாலும் நடக்க வேண்டும்.பிறகு ஏழு இறக்கைகளை கொண்டு வானில் பறக்க வேண்டும் என்று கேட்டார்.

3. குருவி கூறியதாக தெனாலிராமன் அரசவையில் சொன்னது

என்ன ?

காலைப் பொழுதாகவும் இருக்கக்கூடாது நடுப்பகல் பொழுதாகவும் இருக்கக்கூடாது வெளிச்சமாகவும் இருக்கக்கூடாது இருளாகவும் இருக்கக்கூடாது அந்த நேரத்தில் நானே எனது ஏழு இறக்கைகளால் பறந்து திரும்ப வந்து விடுவேன் என்று குருவி கூறியதாக தெனாலிராமன் அரசவையில் சொன்னார் .

III. குறிப்புகளை கொண்டு சொற்களை கண்டுபிடிக்க .

1. மணக்கும் எழுத்து - பூ

2. அரசரும் அமைச்சரும் கூடும் இடம் - அரசவை

3. நிலவும் விண்மீன்களும் வானில் தெரியும் நேரம் - இரவு

4. நவரசங்களில் ஆச்சரியத்தைக் குறிக்கும் - வியப்பு

5. சிக்கலைத் தீர்க்க உதவும் குணம் - சாந்தம்

IV. ஓர் எழுத்தைச் சேர்த்துப் புதிய சொல் உருவாக்குக

1. கதை கவிதை
2. படு பட்டு
3. குவி குருவி
4. தாவு தாழ்வு
5. வசை வரிசை
6. பாவை பார்வை
7. எது எருது
8. அவை அவ்வை
9. ஆம் ஆரம்
10. கவி கருவி

V. நூலகத்தை பயன்படுத்தி ஏதேனும் ஐந்து கதைகளின் பெயர்களையும் அந்த கவிதையின் ஆசிரியர் பெயரையும் பட்டியலிடுக.

| வ. எண் | கதையின் பெயர் | ஆசிரியர் பெயர் | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | பரமார்த்த குரு கதைகள் | வீரமாமுனிவர் | தமிழில் வந்த முதல் நூல் |
| 2. | குளத்தங்கரை அரசமரம் | வ .வே .சு .ஐயர் | தமிழில் முதல் சிறுகதை |
| 3. | கடவுளும் கந்தசாமி பிள்ளையும் | புதுமைப்பித்தன் | மனித வாழ்வை பிரதிபலிக்கும் படைப்பு |
| 4. | செவ்வாழை | அறிஞர் அண்ணா | ஏழையின் நிலைமையை கூறும் நூல் |
| 5. | குற்றம் பார்க்கில் | சு.சமுத்திரம் | நிறைவானதைக் காண வேண்டும் |

பாடம் 4 [முளைப்பாரி பாடல்]

I. பொருள் தருக :

1. முளைப்பாரி - முளையிட்ட நவதானியங்கள் நிறைந்த சிறு மண்பாண்டம்

2. தையலர் - பெண்கள்

3. ஓலைக்கொட்டான் - ஓலையால்செய்யப்பட்ட சிறு கூடை

4. மாட்டாந்தொழு - மாடு காட்டும் இடம்

5. ஆட்டாந்தொழு - ஆடு காட்டும் இடம்

II. சரியான விடையை எழுதுக:

1. இரண்டெழுத்து இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

இரண்டு + எழுத்து

2. பொங்கலிட்டு இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது

பொங்கல் + இட்டு

3. மணி + பயிறு என்பதை சேர்த்து எழுதக் கிடைப்பது மணிப்பயிறு

4. செவ்வாய் + கிழமை என்பதை சேர்த்து எழுதக் கிடைப்பது

செவ்வாய்க்கிழமை

5. பிரித்து எழுதுக :

சோளத்தட்டு = சோளம் + தட்டு

மாட்டெரு = மாடு+ எரு

III. ஒரே சொல் இரண்டு முறை அடுத்தடுத்து வருவதை கண்டறிந்து எழுதுதல் :

கணுக்கணுவா சுளைசுளையா

IV. ஒரே ஓசையில் முடியும் சொற்களை எழுதுதல்:

1. நாளையிலே கிழமையிலே

2. ஊறவச்சி முறிச்சிவச்சி

3. தொழுதெறந்து தொழுதெறந்து

4. சிறுபயிறு மணிப்பயிறு

V. முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து எழுதுக :

1. வாங்கியாந்த - வாளியிலே

2. மாட்டாந்தொழு - மாட்டெருவு

3. ஆட்டாந்தொழு - ஆட்டெருவு

4. ஓரலையாம் - ஓரெலைக்கு

VI. பேச்சு வழக்கு எழுத்து வழக்கு சொற்களை இணைத்தல் :

1. ஒசந்த - உயர்ந்த

2. செவ்வா - செவ்வாய்

3. வாங்கியாந்த - வாங்கிவந்த

4. ஊற வச்சி - ஊற வைத்து

5. முறிச்சி - முறித்து

6. மொளப்போட்ட - முளைக்க வைத்து

VII. பேச்சு வழக்கு சொற்களுக்கு இணையான எழுத்து வழக்கு சொற்களை எழுதுக

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| படிச்சான் | படித்தான் |
| ஓடியாந்தான் | ஓடி வந்தான் |
| காத்தால | காலையில |
| நோம்பு | நோன்பு |
| இங்கிட்டு | இந்தப்பக்கம் |
| போயிட்டு வாறன் | போய் வருகிறேன் |
| சிலவு | செலவு |
| பதட்டம் | பதற்றம் |
| ஆப்பை | அகப்பை |
| அண்ணாக்கயிறு | அரைஞாண் கயிறு |

பாடம் 5[பண்படுத்தும் பழமொழிகள்]

I. சரியான விடையை எழுதுக :

1. அமுதவாணன் தன்தாத்தாவுடன் சென்ற இடம் வாரச்சந்தை

2. யானைக்கொரு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

யானைக்கு + ஒரு

3. பழச்சாறு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பழம் + சாறு

4. நாய் குரைக்கும்

5. ஆசி இச்சொல்லின் பொருள் வாழ்த்து

6. சேர்த்து எழுதுக

வாரம் + சந்தை = வாரச்சந்தை

பழைமை + மொழி = பழமொழி

II. வினா விடை :

1. அமுதவாணன் யாரிடம் ஆசி வாங்கினான் ?

அமுதவாணன் யானையிடம் ஆசி வாங்கினான் .

2. "ஆநெய்" "பூநெய்" ஆகியன எவற்றைக் குறிக்கும் ?

ஆநெய் என்பது பசுவின் நெய்யினையும் பூநெய் என்பது பூவில் ஊறும் தேனையும் குறிக்கின்றன .

3. "ஆற்றில் போட்டாலும் அளந்து போடு" இப்பழமொழியின் பொருளை சொந்த நடையில் கூறுக .

அகத்தில் போட்டாலும் அறிந்து போடணும் என்பது தான் சரியான வாக்கியம். அதாவது புரியாமல் எதையும் மனப்பாடம் செய்து நினைவில் கொள்ளக்கூடாது. கற்கும் போதே தெளிவாக புரிந்து கொண்டு கற்க வேண்டும்

III. பழமொழியை நிறைவு செய்க :

1. யானைக்கொரு காலம் வந்தால் பூனைக்கொரு காலம் வரும்

2. குரைக்கிற நாய் கடிக்காது

3. நாயைக்கண்டால் கல்லைக் காணோம்

4. ஆத்துல போட்டாலும் அளந்து போடணும்

IV. படத்திற்கேற்ற பழமொழியை தேர்வு செய்க :

1. சிறு துளி பெரு வெள்ளம் ☐

2. யானைக்கும் அடி சறுக்கும் ☐

3. காற்றுள்ள போதாய் தூற்றிக் கோல் ☑

V. முதலெழுத்தை மாற்றினால் வேறு சொல் :

| | |
|---|---|
| 1. படிக்க நீயும் | விரும்பு |
| பாறையை உடைப்பது | இரும்பு |
| சுவைத்தால் இனிக்கும் | கரும்பு |
| பூ மலரும் முன்பு | அரும்பு |
| 2. கையின் மறு பெயர் | கரம் |
| வயலுக்கு இடுவது | உரம் |
| பூக்களை தொடுத்தால் | சரம் |
| புன்னை என்பது | மரம் |
| .3. நீர் இறைத்திடுவது | ஏற்றம் |
| புயலோ இயற்கை | சீற்றம் |
| தவறு இழைப்பது | குற்றம் |
| வீட்டில் உள்ளே | முற்றம் |

VI. இணைத்து மகிழ்வோம் (பழமொழி )

1. Talk less work more - குறைவாக பேசு அதிகம் வேலை செய்

2. No pain no gain - உழைப்பின்றி ஊதியமில்லை

3. Good council has no price - நல்ல அறிவுரை விலை மதிப்பற்றது

4. Haste makes waste - பதறாத காரியம் சிதறாது

5. All that glitters are not gold - மின்னுவதெல்லாம் பொன்னல்ல

## பாடம் 6 [முயல் அரசன்]

I. சரியான விடையை எழுதுக

1. பல்லாண்டு இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது பல + ஆண்டு

2. செயலாக்கம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   செயல் +ஆக்கம்

3. இப்போது + எல்லாம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   இப்போதெல்லாம்

4. பேசி + இருந்தால் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது

   பேசியிருந்தால்

5. வந்து + இருந்தது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது வந்திருந்தால்

II. வினா விடை

1. முயலின் கவலைக்கு காரணம் என்ன ?

தன் மூதாதையரைத் தன் பசிக்கு இரையாக்கிய புலி என்றாவது ஒரு நாள் தன்னையும் தின்று விடுமோ என்பது தான் முயலின் கவலைக்குக் காரணம் ஆகும்.

2. விலங்குகளின் கூட்டத்தில் என்ன தீர்மானம் எடுக்கப்பட்டதாக முயல் கூறியது ?

முயல் புலியிடம் "நீ இந்தக் காட்டின் அரசனாக இனிமேலும் நீடிக்கக்கூடாது என்று எல்லா விலங்குகளும் ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேற்றின என்று கூறியது

3. முயல் தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியை என்ன செய்யக் கூடாது ?

முயல் தான் அரசன் என்பதை நிரூபிக்க புலியிடம் தன்னை முதுகில் ஏற்றிக் கொண்டு போகச் சொன்னது

4. புலியை மன்னித்து விட்டுவிட முயல் கூறிய நிபந்தனை என்ன?

புலியை மன்னித்து விட்டுவிட முயல் உன்னை மன்னித்து விடுகிறேன். நீ இந்த காட்டிலேயே இருக்கக்கூடாது. எங்காவது ஓடிப்போய்விடு என்ற நிபந்தனையை கூறியது.

5. விலங்குகள் உண்மையில் இதைக் கண்டு அஞ்சின ?

விலங்குகள் உண்மையில் புலியைக்கண்டு அஞ்சின.

III. எதிர்ச் சொல்லால் சொற்றொடரை நிறைவு செய்.

1. பருவ மழை பெய்தால் மக்கள் <u>மகிழ்ச்சி</u> அடைவர்

பெய்யாவிட்டால் <u>கவலை</u> அடைவர்

2. எப்பொழுதும் உண்மை பேச வேண்டும்

பொய் பேசுவதைத் தவிர்க்க வேண்டும்.

3. கணினி மூலம் கல்வி கற்பது புதிய முறை

கரும்பலகை மூலம் கல்வி கற்றது பழைய முறை

4. தோல்வி என்பது முடிவு அல்ல

வெற்றியின் தொடக்கம்.

5. பிறருக்கு கொடுத்து உதவுவது உயர்ந்த குணம்

பிறர் பொருளைத் திருடுவது தாழ்ந்த குணம் .

6. மருத்துவமனைகளில் சத்தமாகப் பேசாமல்

மெதுவாக பேச வேண்டும்.

IV. சரியா? தவறா ?

1. புலி , முயலின் மூதாதையரைக் கொன்று தின்றுவிட்டது. சரி
2. முயல் புலிக்கு கரும்பு கொடுத்தது . தவறு
3. விலங்குகளின் கூட்டம் நடந்த போது புலி தூங்கிக்கொண்டிருந்தது. தவறு
4. முயல் புலியிடம் காட்டிலுள்ள விலங்குகள் எல்லாம் தன்னைக் கண்டு அஞ்சுவதாகக் கூறியது . சரி
5. முயல் புலியைக் காட்டிலிருந்து ஆட்சி செய்ய வேண்டும் எனக் கூறியது தவறு

V. ஈரெழுத்து சொற்கள் கண்டுபிடிக்க :

1. உலகம் என்பதன் வேறு பெயர். பார்

2. திருவிழா என்றாலே இது இருக்கும் . தேர்

3. மக்கள் சேர்ந்து வாழுமிடம் . ஊர்

4. இது இல்லாமல் உயிர்கள் இல்லை நீர்

5. நீர் விட்டுத் தயிரைக் கடைந்தால் மோர்

6. மரம் செடி கொடி மண்ணில் ஊன்றி நிற்க உதவும் வேர்

7. மன்னர்கள் தம் நாட்டின் எல்லைகளை விரிவுபடுத்த அண்டை நாடுகளோடு செய்வது போர்

8. பூத்தொடுக்க உதவுவது நார்

VI. அகர வரிசைப்படுத்துக :

படை பிண்ணாக்கு பீர்க்கு புத்தகம் பூமி பெட்டி பைந்தமிழ் பொத்தான் போர்வை பௌத்தம்

VII. மொழியோடு விளையாடு

| பல்லினை மெல்லத் தொடு | நாவினை உள்ளே தள்ளு | நாவினைச் சுழற்றி முழக்கு |
|---|---|---|
| பல்லி<br>மெல்ல<br>பால்<br>நெல்<br>சொல்<br>மல்லி | பள்ளி<br>வள்ளி<br>தோள்<br>வெள்ளி<br>நாள்<br>வாள் | வாழ்<br>அகழ்<br>மகிழ்ச்சி<br>யாழ்<br>தமிழ்<br>புகழ் |

பாடம் 7 [சான்றோர் மொழி வெற்றிவேற்கை]

I. சரியான விடையை எழுதுக:

1. தெள்ளிய இச்சொல்லின் பொருள் முதிர்ந்த
2. ஆல் இச்சொல்லின் பொருள் ஆலமரம்
3. கயம் இச்சொல்லின் பொருள் நீர்நிலை
4. புரவி இச்சொல்லின் பொருள் குதிரை
5. பெரும்படை இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது பெருமை + படை
6. நிழல் + ஆகும் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது நிழலாகும்

II. வினா விடை

1. ஆலமரத்தின் விதை எவ்வாறு இருக்கும் என்று அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார் ?

ஆலமரத்தின் விதை தெளிந்த நீர் கொண்ட குளத்தின் சிறிய மீனின் முட்டையை விடவும் சிறியதாக இருக்கும் என்று அதிவீரராம பாண்டியர் குறிப்பிடுகிறார்

2. ஆலமரத்தின் நிழலில் தாங்கும் படைகள் யாவை ?

ஆலமரத்தின் நிழலில் யானைப்படை, தேர்ப்படை , குதிரைப்படை , காலாட்படை போன்ற படைகள் தங்கும்.

3. இப்பாடலின் பொருள் எதனுடன் ஒப்பிடப்படுகிறது ?

இப்பாடலின் பொருள் பிறருக்குச் செய்யும் உதவியுடன் ஒப்பிடப்படுகிறது.

III. பொருத்தமான நிறுத்தற் குறியீடுக :

1. ஆகா ! என்ன சுகம் தெரியுமா ?

2. என்னைக் கட்டிப் போடுகிறார்கள்.

3. ஆகா! இது என்ன பிரமாதம் !

4. நான் என்ன வேலை செய்ய வேண்டும் ?

5. காய்கறிக்கடையில் வேண்டிய தக்காளி,கத்தரி , புடலை ஆகியவற்றை வாங்கி வந்தேன் .

IV. மொழியோடு விளையாடு :

1. மாதத்தின் மறு பெயர் <u>திங்கள்</u>

நிலவைக் குறிப்பது <u>திங்கள்</u>

2. வகுப்பில் பாடம் <u>படி</u>

மாடி செல்ல உதவும் <u>படி</u>

3. வளைந்து ஓடுவது <u>ஆறு</u>

6 இந்த எண்ணின் பெயர் <u>ஆறு</u>

4. பூக்களை தொடுத்தால் <u>மாலை</u>

அந்தி சாயும் பொழுது <u>மாலை</u>

5. சோற்றின் மறு பெயர் <u>அன்னம்</u>

அழகிய பறவை <u>அன்னம்</u>

V. முதல் எழுத்துகள் ஒன்று போல் வரும் சொற்கள் :

| | |
|---|---|
| சிறுபழம் | தம்பி |
| சிறுமீன் | தட்டு |
| சிலந்தி | தலை |
| சிலை | தவளை |
| சிந்தனை | |

VI. இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்கள் :

| | |
|---|---|
| கிண்ணம் | பானை |
| வண்ணம் | யானை |
| நுண்ணியதை | பூனை |
| வண்ணம் | |
| தண்ணீர் | |

VII. இணைப்புச் சொற்களை பயன்படுத்தி சொற்றொடர்களை உருவாக்குக:

1. அரசுத் தேர்வுகள் கடினமாக இருக்கும் ஆகவே விடா முயற்சியுடன் படித்து வெற்றி பெற வேண்டும்

2. தீண்டாமை தீயைப் போன்றது எனவே அதனை உலகை விட்டே ஒட்டுவது நம் கடமை

3. நான் நல்லவனாக வாழ விரும்புகிறேன் ஆகையால் தீயோரிடம் நட்பு பாராட்ட மாட்டேன்.

4. காந்தியடிகள் லண்டனில் படித்தார் ஆனால் ஆங்கிலேயர்களுக்கு அடிபணிந்து போகவில்லை.

பாடம் 8[விடியும் வேளை]

I. சரியான சொல்லை பொருத்துக:

1. வேளை நேரம்
2. பொதி மூட்டை
3. ஆயத்தப்படுத்துதல் தயார் செய்தல்
4. துளிர் இளம்இலை
5. கொடியடுப்பு பக்க அடுப்பு

II. சரியான சொல்லை தேர்ந்தெடுத்தல் :

1. சாலையெங்கும் இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது சாலை + எங்கும்
2. சுண்டியிழுக்கும் இச்சொல்லை பிரித்து எழுத்தக் கிடைப்பது

   சுண்டி +இழுக்கும்
3. ஓடி + ஆடி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது ஓடியாடி
4. காலை + பொழுது என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்

   காலைப்பொழுது
5. வரகு + அரிசி என்பதைச் சேர்த்து எழுதக் கிடைப்பது வரகரிசி
6. உணவு + அளிக்க என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் உணவளிக்க

III. வினா விடை

1. அழகிய மலைக்கிராமத்தின் பெயர் என்ன ?

   அழகிய மலைக்கிராமத்தின் பெயர் மன்னவனூர் ஆகும் .

2. கிராமத்தில் உனக்கு பிடித்த இயற்க்கைக்கு காட்சிகளை எழுதுக .

மழை பெய்து ஓய்ந்திருந்தது சாலையெங்கும் தண்ணீர் நிறைந்திருந்தது.மரங்கள் நனைந்து கிளைகள் இலைகள் முழுக்க நீர்த்திவலைகள் தெரிந்தன. பச்சைப்பசேல் என்ற வயல்வெளிகள்.

3. பிள்ளைகள் காலை உணவாக என்ன சாப்பிட்டார்கள் ?

பிள்ளைகள் காலை உணவாக வரகரிசிச் சோறும் பருப்பு கடையலும் பிரண்டைத் துவையலும் சாப்பிட்டனர் .

IV. வருணனை சொற்கள் :

- சிலுசிலுப்பான காற்று
- வெள்ளை வெளேரென வரகராசிச் சோறு

V. பத்தியை படித்து வினாக்களுக்கு விடை தருக :

1. எவ்வகை உணவு முறை நமக்கு ஏற்புடையது ?

சிறுதானிய உணவுகளே நமக்கு ஏற்புடையது .

2. சிறுதானியங்களுள் ஏதேனும் நான்கினை எழுதுக .

திணை,வரகரிசி , கேழ்வரகு ,கம்பு

3. துரித உணவு வகைகளை உண்ணக் கூடாது ஏன்?

துரித உணவு வகைகள் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவதால் அவைகளை உண்ணக் கூடாது.

பாடம் 9 [கரிகாலன் கட்டிய கல்லணை]

I. சரியான சொல் தேர்ந்தெடுத்தல் :

1. துயரம் இச்சொல் குறிக்கும் பொருள் - துன்பம்
2. வியத்தகு இச்சொல் குறிக்கும் பொருள் - ஆச்சரியம் தரும்
3. முறியடித்து இச்சொல் குறிக்கும் பொருள் - தகர்த்து
4. சூழ்ச்சி இச்சொல் குறிக்கும் பொருள் - தந்திரம்

II. சரியான சொல் தெரிவு செய்தல் :

1. பெருவெள்ளம் இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>பெருமை +வெள்ளம்</u>

2. தங்கியிருந்த இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது <u>தங்கி + இருந்த</u>
3. அமைந்துள்ளது இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது

   <u>அமைந்து + உள்ளது</u>

4. அரசு + ஆட்சி என்பதை சேர்த்து எழுதக் கிடைப்பது <u>அரசாட்சி</u>
5. நீர் + பாசனம் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் <u>நீர்ப்பாசனம்</u>

III. எதிர்சொல் தருக :

1. புதுமை - பழைமை
2. சிறிய - பெரிய
3. அருகில் - தொலைவில்
4. நண்பர்கள் - எதிரிகள்
5. மேல்தளம் - அடித்தளம்

IV. சரியானதை எடுத்து எழுதுக :

1. கல்லணை அமைந்துள்ள மாவட்டம் <u>திருச்சி</u>

2. தமிழ்நாட்டில் காவிரியின் முக்கிய துணையாறு <u>கொள்ளிடம்</u>

3. கல்லணை பழந்தமிழர் தொழில்நுட்பத்திற்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

V. வினா விடை :

1. கல்லணையைக் காட்டியவர் யார் ?

கல்லணையைக் கட்டியவர் சோழ அரசன் கரிகாலன் ஆவார் .

2. கரிகாலன் என்று பெயர் வரக் காரணம் என்ன ?

கரிகாலன் எண்பதற்குக் கருகிய காலை உடையவன் என்பது பொருள் .இளம் வயதில் இவருக்கு ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக இப்பெயர் இவருக்கு வழங்கலாயிற்று.

3. கரிகாலன் கல்லணையைக் கட்ட காரணம் யாது ?

காவிரியின் அடிக்கடி பெருவெள்ளம் வரும் ஆனால் அந்த நீர் எதற்கும் பயன்படாமல் கடலுக்கு சென்று விடும் . மக்கள் மழைக்காலத்தில் வெள்ளப்பெருக்காலும் கோடைக்காலத்தில் நீர் இன்றியும் மக்கள் துயரப்பட்டதைக் கண்டு அதனைத் தடுக்கும் பொருட்டு பெரியதோர் அணையைக் கட்ட முடிவெடுத்தான் கரிகாலன்.

4. கல்லணையில் சிறப்பாக நீ நினைப்பதை எழுதுக .

தற்போது பயன்பாட்டில் உள்ள மிகப்பழைமையான ஒரே அணை கல்லணை .இதுவே உலகில் மிகப்பழைமையான நீர்பாசனத்திட்டம் எனவும் கூறப்படுகிறது .மணலில் அடித்தளம் அமைத்துக் கட்டியுள்ளார்கள்.இது பழந்தமிழரின் தொழில்நுட்பத்திற்கு சான்றாகும்.இன்றுவரை இது வியத்தகு சாதனையாக உள்ளது .

## கூடுதல் வினாக்கள்

### பாடம் 1 [அன்னைத்தமிழே]

1. அன்னைத்தமிழே பாடலின் ஆசிரியர் - நா.காமராசர்
2. ஆவி என்ற சொல்லின் பொருள் - உயிர்
3. கலந்து + அவளே - கலந்தவளே
4. வளர்ப்பு + அவளே - வளர்ப்பவளே
5. அன்னையாகிய - அன்னை + ஆகிய
6. மட்டும் + அல்லாமல் - மட்டுமல்லாமல்
7. பிறந்து + உள்ளேன் - பிறந்துள்ளேன்
8. இ + உலகில் - இவ்வுலகில்

### பாடம் 2 [பனைமரச் சிறப்பு]

1. பனைமரத்தின் வேறு பெயர் - கற்பகத்தரு
2. கற்கண்டாக பயன்படுவது - பனஞ்சாறு
3. தமிழ்நாட்டின் மாநில சின்னம் - திருவில்லிபுத்தூர் கோவில் கோபுரம்
4. தமிழக அரசின் மாநிலப் பாடல் - நீராரும் கடலுடுத்த
5. தமிழக அரசின் மாநில விலங்கு - வரையாடு
6. தமிழக அரசின் மாநில மலர் - செங்காந்தள்
7. தமிழக அரசின் மாநில மரம் - பனை
8. தமிழக அரசின் மாநில விளையாட்டு - கபடி

தமிழக அரசின் மாநில பழம் - மாம்பழம்

தமிழக அரசின் மாநில பறவை - மரகதப்புறா

பாடம் 3 [ஏழு இறக்கைக் குருவியும் தெனாலிராமனும்]

1. தெனாலிராமனின் அரசன் பெயர் கிருஷ்ண தேவராயர்

2. விகடகவி என்றால் என்ன ?

நகைச் சுவை தோன்ற பாடுபவர் என்பது பொருள் .

பாடம் 4 [முளைப்பாரி பாடல்]

1. கணுக்கணுவா = கணு + கணுவா

2. சோளத்தட்டை = சோளம் + தட்டை

3. ஆட்டு + எருவு = ஆட்டெருவு

4. மாட்டு + எருவு = மாட்டெருவு

பாடம் 5 [பண்படுத்தும் பழமொழிகள்]

1. என்பதற்கேற்ப = என்பதற்கு + ஏற்ப

2. பழமொழி = பழைமை + மொழி

3. சரி + ஆனது = சரியானது

4. யானைக்கு + ஒரு = யானைக்கொரு

5. நாயகனாக = நாயகன் + ஆக

6. தேன் + ஒரு = தேனொரு

பாடம் 6 [முயல் அரசன்]

1. விளைந்து + இருந்த = விளைந்திருந்த

2. காலம் + ஆக = காலமாக

3. வயிறு + ஆர = வயிறார

4. என்று + ஆவது = என்றாவது

5. கொண்டிருந்தாய் = கொண்டு + இருந்தாய்

பாடம் 7 [வெற்றி வேற்கை ]

1. வெற்றி வேற்கையின் ஆசிரியர் - அதிவீரராம பாண்டியன்
2. சினை இச்சொல்லின் பொருள் - முட்டை
3. அண்ணல் என்பதன் பொருள் - கருணையுடையவர்
4. சிறியதாக - சிறியது + ஆக
5. உதவி + ஆக - உதவியாக

பாடம் 8 [விடியும் வேளை]

1. உடம்புடன் - உடம்பு + உடன்
2. கொடி + அடுப்பில் - கொடியடுப்பில்
3. துளிரான - துளிர் + ஆனா
4. சப்பு + கொட்ட - சப்புக்கொட்ட
5. அறிவுமதி அரைத்து வைத்த துவையல் - பிரண்டை

பாடம் 9 [கரிகாலன் கட்டிய கல்லணை]

1. கரிகாலனின் இயற்பெயர் - வளவன்
2. கரிகாலன் யாருடைய மகன் - இளஞ்செட்சென்னி
3. உலகின் மிகப் பழைமையான அணை - கல்லணை
4. காவிரி ஆறு <u>நான்காகப்</u> பிரிகிறது
5. கல்லணை <u>காவிரி</u> ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது .